# பவுலைப் போல புதிய மேய்ப்பர்களை போதித்து உருவாக்கவும்

இயேசுவையும் அவரது சீஷர்களையும் போல பணிசெய்ய புதிய தலைவர்களைப் பயிற்றுவித்தல்.

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் E2b யைப் படிக்கவும்.

**ஜெபம்:** "பவுலைப் போல மக்கள் வாழும் இடத்திற்கே உமது வார்த்தையை எடுத்துச் சென்று அவர்களின் தலைவர்களைப் பயிற்றுவிக்க எங்களுக்கு உதவி செய்யும்."



**கவனிக்கவும்:** தங்கள் சபைகளுக்கு என்ன தேவை என்பதை பயிற்சி பெறுபவர்கள் கூற, ஒரு போதனையாளர் கவனித்துக் கேட்கிறார். பின்னர் மத். 13:52 கூறுவது போல, பயிற்சி பெறுபவர்களின் மந்தைக்கு தற்போதைய தேவைகள் எதுவோ அத்தகைய பாடங்களை பயிற்றுவிப்பவர் கொண்டு வருகிறார்.

1. **தேவ வார்த்தைகளைக் கொண்டு உங்கள் இருதயத்தையும் மனதையும் ஆயத்தம் செய்க.**

கிரேத்தாவில் தீத்து என்ன செய்ய வேண்டும் என்று பவுல் விரும்பினார் என்பதை **தீத்து 1:5** ல் காண்க.

*(பதில்: சபைகளை கவனித்துக் கொள்ள மூப்பர்களை நியமித்து, ஒவ்வொரு பட்டிணத்திலும் உள்ள தேவைகளைத் தீத்து பூர்த்தி செய்தான். மூப்பர்களை பயிற்றுவிக்க ஆயத்தமாகும்படி பவுல் தீத்துவுக்கு போதித்து கிரேத்தாவில் விட்டுச் சென்றார்).*

சென்று போதித்தல் (extension education) மூலமாக தேவ வார்த்தையைப் போதித்தலுக்கு ஒரு உதாரணத்தை **2 நாளாகமம் 17:3-9** ல் காண்க:

- தேவ வசனம் சென்றடையாத பட்டிணங்களுக்கு அதை எடுத்துச் செல்லுமாறு யோசேபாத் இராஜா ஒரு போதகர் குழுவை அமைத்தான்.
- மக்களை ஒரு மையமான இடத்திற்கு வர வைப்பதற்குப் பதிலாக, அவர்கள் மக்கள் வாழ்ந்த இடங்களுக்கு போதனையை எடுத்துச் சென்றனர். இயேசுவை விசுவாசிக்கும் பல புதிய சபைகளைப் பெருக்க இன்றும் இம்முறை பயன்படும்.
- தற்காலத்தில் புதிய கிறிஸ்தவத் தலைவர்களுக்கு இரு வகையாக போதிக்கின்றனர்:
    1) மரபான வகுப்பறைகளில் பெரிய குழுக்களுக்கு போதித்தல்.
    2) இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் செய்தது போல சிறிய குழுக்களுக்கு அன்பு நிறைந்த அக்கறையோடு போதித்தல்.
- உடனடி கவனம் தேவைப்படும் அவசரத் தேவைகள் இல்லாத நன்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபைகளுக்கும், முதிர்ந்த ஊழியர்களுக்கும் மரபான வகுப்பறை போதனை சிறந்ததாக இருக்கும்.
- அனுபவம் வாய்ந்த விசுவாசிகளும் தலைவர்களும் இல்லாத, சபைகள் மற்றும் குழுக்களின் அவசரத் தேவைகளை சந்திக்க, இயேசுவும் அப்போஸ்தலர்களும் செய்தது போல புதிய தலைவர்களை போதித்து உருவாக்கும் முறை சிறந்ததாகும்.
- புதிய சபைகளையும் புதிய தலைவர்களையும் அவசரத் தேவைகள் கொண்ட புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு ஒப்பிடலாம். அவர்களுக்கு குறைபடுவதைக் குறித்து கவனமாகக் கேட்டு அதற்கேற்றபடி போதிக்க அவர்களுக்கு அனுபவம் வாய்ந்த மக்கள் தேவை.

**பவுலின் போதனை சங்கிலியில் (mentoring Chain) காணப்படும் நான்கு தொடர்புகளை தீமோத்தேயு 2:2 ல் காண்க.**

**நான்கு இணைப்புகளாவன:**

1) இந்தப் புத்திமதிகளை எழுதிய **பவுல்**. அவர் அந்தியோகியாவில் உள்ள சபையால் அனுப்பப்பட்டார். (அப். 13:1-3).

2) **தீமோத்தேயு:** இந்தப் புத்திமதிகளைப் பெற்று பிறரைப் பயிற்றுவிப்பதற்காக எபேசுவில் தங்கி இருந்தார் (1 தீமோ. 1:1-5).

3) **உண்மையுள்ள மனிதர்கள்:** எபேசு மற்றும் அதைச் சுற்றி இருந்த பட்டிணங்களில் உள்ளவர்கள். தீமோத்தேயுவிடம் இருந்து பயிற்சிகளைப் பெற்றவர்கள். இவர்களில் ஒருவர் கொலோசெ பட்டிணத்தில் புதிய மந்தையை மேய்த்த எப்பாப்பிரா.

4) **மற்றவர்களும்:** எராப்போலியில் எப்பாப்பிரா போல் போதிக்கப் பட்டவர்கள்.

இந்தப் பெருக்கத்தை நிலைநிறுத்த நாம் பின்வரும் **புதிய ஏற்பாட்டு வழிமுறைகளை** பயன்படுத்துகிறோம்.

- சபைகள்: புதிய சபைகளை ஸ்தாபிக்கத் தங்கள் அப்போஸ்தலர்களை அனுப்புகின்றன. ஒவ்வொரு சபைக்கும் தருவதாக எபேசியர் 4:11-12 ல் தேவன் வாக்குத்தத்தம் செய்த ‘அனுப்பப்பட்டவர்களே’ இந்த அப்போஸ்தலர்கள்.
- மேய்ப்பர்கள்: பவுல் 2 தீமோ. 2:2 ல் எழுதியது போல, கால தாமதம் இன்றி மேய்ப்பர்கள் புதிய மேய்ப்பர்களை உருவாக்குகின்றனர்.
- **பயிற்றுவிப்பவர்கள்** (போதனையாளர்கள்)

  1) நிச்சயம் இல்லாத ஒரு நிழல் போன்ற எதிர்கால வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திராமல் தாங்கள் கற்றுக் கொண்டதை பயிற்சி பெறுபவர்கள் தங்கள் மந்தையில் நடைமுறைப் படுத்த செய்பவர்கள்.

  2) ஒரு மந்தையை வழிநடத்த தேவன் வரமாக தந்த சிலவற்றை விலக்கிவிட்டு, மனிதன் உண்டாக்கிய சட்டங்களைப் புகுத்துவதை தவிர்த்து, ஒரு கண்காணிக்கும் மூப்பனுக்கு தேவை என்று புதிய ஏற்பாடு கூறுவதை மட்டுமே வலியுறுத்துபவர்.
- **பயிற்சி பெறுபவர்கள்:** (போதகர்களாகப் பயிலும் மாணவர்கள்)

  1) தங்களுக்குப் போதிப்பவர்களோடு திட்ட மிட்டவைகளை உடனடியாக மந்தையில் நடைமுறைப் படுத்துவது.

  2) புதிய சபைகளின் பெருக்கத்தை அப்படியே கொண்டு செல்வதற்காக புதிய புதிய மக்களுக்கு பயிற்சி அளிப்பதைத் தொடங்கவும். புதிய சபை ஒன்றை ஆரம்பிப்பதற்காக ஊழியர்கள் தங்கள் மந்தையை விட்டு நிரந்தரமாக பிரிய வேண்டியதில்லை. பவுலையும் பர்னபாவையும் போல (அப்.13 & 14) அவர்கள் தங்கள் சொந்த சபைகளுக்குத் திரும்பி வரலாம்.

**2. சபை இந்த வாரம் செய்யவேண்டிவைகளைப் பற்றி உடன் ஊழியர்களுடன் கலந்தாலோசிக்கவும்.**

- நீங்கள் வாழும் பகுதியில் உள்ள எந்த சபைக்கு கண்காணிப்பு தேவை என்பதை கண்டறியுங்கள். ஒவ்வொரு சபையின் தேவைகளையும் கவனிக்க தீத்து, கண்காணிக்கும் மூப்பர்களை நியமித்து போதனை செய்தான்.
- எந்த மந்தைக்காகவாது யாரும் புதிய தலைவர்களை பயிற்று விக்காவிட்டால், அதை யார் செய்வது என்பது குறித்து ஜெபத்தோடு முடிவு எடுக்கவும்.
- நீங்களோ மற்ற மேய்ப்பர்களோ, தலைவர்களாக பயிற்றுவிக்கக்க் கூடியவர்களோடு பேசவும். பவுல் செய்தது போல பல இணைப்புகளை உருவாக்கும் சங்கிவித் தொடரான பயிற்சிகளை உண்டாக்கவும்.
- புதிதாகப் பயிற்சி பெறுவர்கள் தங்கள் பணியை உடனடியாக தங்கள் குடும்பத்திலும், நெருங்கிய நண்பர்களிடத்திலும் தொடங்க உதவவும்.

## 3. வரும் ஆராதனை வேளை குறித்து உடன் ஊழியர்களுடன் கலந்து ஆலோசிக்கவும்.

தற்போதைய தேவைகளுக்கும் வட்டாரப் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்து கொள்க.

யோசேபாத் அனுப்பிய போதகர்களின் **கதையைக்** கூறி, பகுதி 1 ல் பட்டியல் இடப்பட்டுள்ள விவரங்களை விவரிக்கவும்.

பவுல் ஏன் தீத்துவை கிரேத்தாவில் விட்டுச் சென்றார் என்பதையும், தீத்து செய்ததை உங்கள் சபையில் உள்ள போதனையாளர்களும் (mentors) செய்யலாம் என்பதையும் **விளக்கவும்.**

**2 தீமோத்தேயு 2:2** ல் உள்ள போதனைச் சங்கிலியின் நான்கு இணைப்புகள் குறித்தும் கவனமாக விளக்கி, உங்கள் மந்தையும் இதே போன்ற பெருக்கத்தை கண்டடைய தேவன் உதவுவார் என்பதையும் விளக்கவும்.

இந்த வாரத்தில் நீங்கள் செய்யத் திட்டமிட்டுள்ள செயல்பாடுகளை அறிவித்து விளக்கவும்.

குழந்தைகள் தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை, பாடல்களை வழங்குமாறு கூறவும். ஜெபிக்கவும், திட்டங்களை உறுதிப்படுத்தவும், ஒருவரை ஒருவர் ஊக்குவிக்கவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களை அமைக்கவும்.

1 கொரி. 11:34 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்தவும்.

கொரிந்தியர்கள் கர்த்தரின் பந்தியை ஆசரித்த போது சில சமயம் அவர்கள் தினசரி உணவு உண்ணுவதைப் போல உண்டனர். இதனால் ஆவிக்குரிய தன்மை பின்னுக்குத் தள்ளப்பட்டது. இது போல் அல்லாமல் நாம் இந்த மிகவும் பரிசுத்தமான கொண்டாட்டத்தில் இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்து மதிப்பளிக்க வேண்டும்.

பவுலைப் போல எவ்வாறு போதனை செய்தனர் என்பதை விசுவாசிகள் **சாட்சியாகக் கூறலாம்.**

**கவிதை:**

கல்வியைக் குலைக்கும்படியாக

சந்தேகப்படாத போதகனின் மனதில்

ஊடுருவிச் செல்லும் திட்டங்களைத் தீட்ட

எதிரி தன் கையைத் தேய்த்துக் கொள்கிறான்!

கொடூரச் சிரிப்போடு

அக்கினி அம்பை எய்கிறான்!

அதற்கு அவன் இட்ட பெயர் 'மனிதஞானம்'.

தங்களை சாமர்த்தியசாலிகள் என்று

சிந்திப்பவர்களை அது தாக்குகிறது!!

சேர்ந்து **மனப்பாடம் செய்ய வேண்டியது:** தீத்து 1:5.

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net.